பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 21 06 08·94 சனிக்கிழமை ஓசை 169

இரசாயனப் பொருள் பயன்பாடு வருடம் 2000 பேர் இறப்பு

இரசாயனப் பொருள்களை பயன்படுத்துவதால் இலங்கையில் வருடாந்தம் இரண்டாயிரம் பேர் உயிரிழந்து வருகிறார்கள் என இரசாயனப் பொருள்களின் அதிக பாவனை பற்றிக் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் தெரிவிக்கப்பட்டது. இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதனால் விவசாயம், மருத்துவம் போன்ற பல முனைகளில் உடனடிப் பலன்களைப் பெறமுடிகின்றது. ஆனால் இப் பாவனையால் பல தீமைகள் பக்கவிளைவாக உருவாவது கவனிக்கப் [6 ஆம் பக்கம் பார்க்க]

தேர்தலில் அமைதிபேணவிடில்

நாட்டு இறைமை பாதிக்கப்படும்

சகல கட்சித் தலைவர்களிடமும் ஜெனரல் ஹமில்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெறினும், அமைதி பேண உதவுமாறும், அல்லது அது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா சகல கட்சியினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற சகல கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது- இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜெனரல் ஹமில்ட்டன் வனசிங்கா, பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறினும் அமைதி பேண உதவுமாறும், இல்லாது போனால் அது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என்றும், தேர்தல் அண்மிக்கும் நாட்களில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இது குறித்துத் தெரிவிக்கையில், கட்சித் தலைவர்கள் தமது ஆதரவாளர்கள் ஊடாக இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் (6 ஆம் பக்கம் பார்க்க)

பொது தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஆகஸ்ட் பதினாறாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்திடைந்து விட்டதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தடி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற சகல அரசியல் கட்சிகளின் பொதுச்செயலர்மற்றும் சுயேட்சை குழுக்களின் தலைவர்கள் கலந்து கொண்ட சந்திப்பின் போது இக்கருத்தைத்தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் சென்ற காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு தேவை (6 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவின் கூட்டத்தில் பொலிசார் துப்பாக்கிச்சூடு

8 பேர் காயம்; ஒருவர் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

கண்டிப்பகுதியில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுக் கூட்டம் மீது மாற்றுக் சட்சியாளர்கள் கல்லெறிந்ததையடுத்து பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

குழப்பநிலையை அடக்க பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் இதனால் 8பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கூட்டத்திற்கு சந்திரிகா கலந்து கொள்ளவிருந்தார் பெருமளவில் கூட்டமும் திரண்டிருந்தது சந்திரிகா வந்து சேர முதல் கட்சியின் உறுப்பினர் ஒருவர் பேசிக் கொண் (6 ஆம் பக்கம் பார்க்க

பிரபாகரன் நாட்டைப் பிரிக்க சந்திரிகா உதவுகிறார்

தினேஷ் குணவர்த்தனா குற்றச்சாட்டு

அஷ்ரப்பும் பிரபாகரனும் இணைந்து நாட்டைப் பிரிக்க முனையும் போது சிங்கள இனத்தைச் சேர்ந்த சந்திரிகா அவர்களுக்கு உதவுகின்றார் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தேர்தல் கூட்டம்

நாட்டைக்காட்டிக் கொடுக்கும் அமைச்சர் பதவி எனக்கு அவசியமில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியின் ஏனையோரும் இவ்வாறான பதவிகளை ஏற்கத்தயாராக இருக்கவில்லை

புலமைப் பரிசில் நாளை பரீட்சை

(கொழும்பு)

நாடளாவியரீதியில்ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்காக நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி நடைபெறும் என பரீட்சை (6 ஆம் பக்கம் பார்க்க)

தேடப்படுகிறாராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இரகசிய உளவு சேவைப் பிரிவின் தீவிர அங்கத்தவரும் சுடுபடைக் கலன்கள், வெடிபொருள்கள் பற்றிய நிறைந்த அனுபவம் உள்ளவர் என கூறப்படுபவருமான தேவி அக்கா எனப்படும் தர்மதேவி என்பவர் சிறிலங்கா பொலிசாரினால் தேடப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

வீரச்சாவு

கப்டன் செல்வகுமார்

கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடு (6 ஆம் பக்கம் பார்க்க)

மாதகல் கடற்பரப்பிலிருந்து கடும் பீரங்கித் [illegible]குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் [illegible]கள் வரை மேற்கொள்ளப் பட்டது. என்றுமில்லாதவாறு

உணர்வுபூர்வமாக கரும்புலிகளை மக்கள் நேற்று நினைவுகூர்ந்தனர்

முனையும் போது சிங்கள இனத்தைச் சேர்ந்த சந்திரிகா அவர்களுக்கு உதவுகின்றார் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தும் அமைச்சர் பதவி எனக்கு அவசியமில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியின் ஏனையோரும் இவ்வாறான பதவிகளை ஏற்கத்தயாராக இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் காவலிலிருந்த முஸ்லிம் வியாபாரி மரணம்

கற்பிட்டி பொலிசாரினால் கைதான முஸ்லிம் வியாபாரி ஒருவர் பொலிஸ் காவலில் மரணமடைந்தார் இது தொடர்பாக இப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த மூன்று பொலிசார் இடைநிறுத்தப் பட்டுள்ளனர். ஏனைய பொலிசார் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்த முஸ்லிம் வியாபாரி சட்டவிரோதமாக மன்னாருக்கு எரிபொருள் கடத்தியதாக பொலிசாரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

காட்டுக்கு தீ வைத்த படை ஒருவரை தீயினுள் வீசியது

(திருமலை)

திருகோணமலை பட்டியடி சிறிலங்கா இராணுவத்தினர் சீனன் வெளிப் பகுதிக் காடுகளை தீயிட்டதுடன் பொதுமகன் ஒருவரையும் தீயில் தூக்கி வீசியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பட்டியடி இராணுவத்தினர் உப்பூறல் பகுதிக்கு வந்து வீடொன்றைத் தீக்கிரையாக்கினர். பின்பு அங்கிருந்து சீனன் வெளிக்குச் சென்று காடுகளைத் தீயிட்டனர். இதன்போது தங்கராசா என்பவரை அத் தீயில் தூக்கி வீசியுள்ளனர். ஆயினும் இவர் எரிகாயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.

தேர்தல் கண்காணிப்புக் குழு; நிகழ்ச்சித் திட்டம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை மேற்பார்வை செய்வதற்காக அழைக்கப்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் நாற்பது பேர் இம் மாதம் பதினொராம் திகதி கொழும்பு வர இருப்பதாக தெரிய வந்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஷ், பிரிட்டன், மலேசியா பிரதிநிதிகள் உட்பட சர்வதேச சட்டத்தரணிகளும் இக் குழுவில் உள்ளடங்குகின்றதாக மேலும் தெரிய வருகின்றது.

இக் குழுவினர் ஆகஸ்ட் 12, 13-ம் திகதிகள் தேர்தலில் பங்கு கொள்ளும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க இருப்பதாகவும் 15-ம், 16-ம் திகதிகளில் சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் இதில் மாவட்ட கட்சி பிரதிநிதிகளை சந்திக்க இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை 16-ம் திகதி பொதுத்தேர்தலை இக் குழுவின் அங்கத்தினர் மேற்பார்வை செய்ய இருப்பதாகவும் 18-ம், 19-ம் திகதிகளில் எந்தக் கட்சி பிரதிநிதிகளும் இவர்களைச் சந்தித்து தேர்தல் தொடர்பாக முறைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடும் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் நேற்று மாலை மக்கள் குடியிருப்புகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

நேற்றுமாலை 3-15 மணிக்கு ஆரம்பமான இத்தாக்குதலானது சுமார் 15 நிமிடங்கள் வரை மேற்கொள்ளப்பட்டது. என்றுமில்லாதவாறு நடத்தப்பட்ட இப்பீரங்கித் தாக்குதலானது சுமார் பத்து மைல்களுக்குக் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் பீதியடைந்து காணப்பட்டனர். எனினும் இத்தாக்குதலால் ஏற்பட்டசேத விபரங்கள் தெரியவரவில்லை.

சிறிமாவோவே பிரதமர் ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் பிரதமர் பதவிக்கு சுட்சித் தலைவர் என்ற முறையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே அழைக்கப்படுவார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பொ. ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் பிரதமர் பதவிக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்காவே அழைக்கப்படவேண்டும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் தி. மு. ஜெயரட்ண ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளுக்கு மேற்கண்டவாறு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்பொதுமகன் சுட்டுக்கொலை

திருமலை அம்மன் நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ்ப் பொதுமகன் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை 8 மணியளவில் நடந்த இந்த சம்பவத்தில் காளியப்பு பெரியதம்பி (வயது 30) என்பவரே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

பொ.ஐ.மு. வெற்றிபெறின் சந்திரிகாவே பிரதமர்

சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவிப்பு

(லண்டன்)

பொது ஜன ஐக்கிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் போது பிரதமர் பதவி சந்திரிகாகுமாரணதுங்காவிற்கே வழங்கப்படும் என்றும் இதில் எந்த மாற்றமும் இல்லை எனவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சியின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கு இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக கட்சி அறிவித்துள்ளதாகவும் அரசியல் இலாபத்திற்காக சிலர் இவ்விடயத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் நேற்று நினைவுகூர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப்படைத்தளத்தினுள்புகுந்து உலகம் வியக்கும் வகையில் வீரசாதனை படைத்த கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் பலாலித்தளத்தில் பெற்றுக்கொண்ட வெற்றியை நினைவுகூரும் முகமாகவும் நேற்று குடாநாடு முழுவதும் எழுச்சிக்கோலம் பூண்டிருந்தது-குடாநாட்டின்அனைத்து பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகள், பொது இடங்கள், போன்ற பகுதிகளில் சிவப்பு மஞ்சள் வர்ணத் தோரணங்களும், வாழைகளும் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது- மேலும் வீரகாவியம் படைத்த கரும்புலிகளதும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி தளத்தில் வீரசாதனை படைத்த மாவீரரின் உருவப்பட ஊர்தி பவனி

இன்றும் நாளையும் 3 கோட்டங்களிலும் பவனிவரும்

பலாலி விமானப்படைத் தளத்தினுள்ஊடுருவிச்சென்று வெற்றிகரமாகக் கரும்புலித் தாக்குதல் நடாத்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஆறு கரும்புலிகளினதும், இரண்டு வீரவேங்கைகளினதும் திருவுருவப் படங்களைத் தாங்கிய தனித்தனி ஊர்திகள் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மூன்று கோட்டங்களின் வீதிகளில் அனைத்துத் தமிழீழமக்களினதும் வீரவணக்கத்திற்காக இன்று காலை 9.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளன. இவ் ஊர்திகளின்பவனி நாளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி குடியிருப்புகள் மீது இரவு, பகல் எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிக் குடியிருப்புகள்மீது பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மூன்றினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அகோர ஆட்லறி ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி நால்வர் படுகாயமடைந்துள்ளனர். பல வீடுகள் சேதமாகின.

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மூன்றினம் இரவு 7 மணி முதல் நேற்று அதிகாலை 3 மணிவரை இப் பகுதிக் குடியிருப்புகள்மீது மேற்கொள்ளப்பட்ட படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்களும் உணவு உட்கொண்டவர்களும் படுகாயமடைந்துள்ளனர் இவர்களது வீடுகளும் சேதமடைந்தன.

தொண்டமானாறு பகுதியிலுள்ள வீடொன்றின்மேல்

நால்வர் படுகாயம்

இரவு 7 மணியளவில் விழுந்த ஆட்லறி ஷெல் ஒன்றுக்கு உணவு உட்கொண்டவாறு இருந்த சகோதரிகளான சிவலிங்கம்-சிவலதா (வயது7) சிவலிங்கம் சிவமதி (வயது13) ஆகிய இருவரும் காயமடைந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வரி விளம்பரம்

ஆண்டு 4

1995 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியில் இருந்து கற்பிக்கப்படும். ஆரம்பம் -06-08-94 சனிக்கிழமை மு.பகல் 8.30 மணி. நாவலர் கல்விக் கழகம், ஆனைப்பந்திசந்தி, யாழ்ப்பாணம். (9023)

விற்பனைக்குண்டு

சாசாலை கனகன்புளியடிச் சந்திக் கருகாமையில், சாவகச்சேரி றோட்டில், சகல வசதிகளும் கொண்ட வீடும் வளவும் (12 பரப்புக் காணி) விற்பனைக்குண்டு. தொடர்பு முகவர்;-திருமதி, சம்புலிங்கம் C/o இராமச்சந்திரன் இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (9002)

விற்பனைக்குண்டு

Mills and Boon நவீனங்கள் விற்பனைக்குண்டு தொடர்பு புஷ்பா செல்வநாயகம் 151, கோவில்வீதி நல்லூர். (9031)

தவறிவிட்டது

கடந்த 2-ம் திகதி பயணத்தின் போது கிளிநொச்சியில் அடையாள அட்டை, பாஸ் போட், வைத்திய கிளினிக் காட், மருந்துவகைகள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்து, திருமதி பீதாம்பரம் வள்ளியம்மாள் பத்திரகாளி கோவில் வீதி, பருத்தித்துறை. விலாசத்தில் ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். [9034]

கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவை சங்கம் தொண்டர்களுக்காக நடத்தும் கருத்தரங்கு இன்று முற்பகல் பத்து மணியளவில் ஹென்றி டுனால்ட் மண்டபத்தில் நடை பெறும்.

திருமுறைவிழாவும் இலக்கிய விழாவும்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு பொதுமக்கள், சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியன கூட்டாக இணைந்து நடாத்தும் சைவத்திருமுறைப் பெருவிழாவும், இலக்கிய

தமிழர்களுக்கு வீடு வாடகைக்கு விடவேண்டாம்

கொழும்பில் பொலிசார் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும், தமிழர்களுக்கு வீடுகள் வாடகைக்கு கொடுக்க வேண்டாம் என பொலிசார் வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துவதாக சொழும்பு இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது,

அண்மையில் வத்தளைப் பகுதியிலுள்ள முக்கிய பிரமுகர்களை அழைத்து பொலிசார் இவ் விடயத்தை வலியுறுத்திக் கூறியதாகவும், பொலிசில் பதியச் செல்வோரையும் பதியமுடியாதென பொலிசார் விரட்டுவதாகவும், அழைத்து வரும் வீட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்படுவதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், வத்தளைப்பகுதியிலுள்ள சில வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் தங்கியிருக்கும் தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற முயற்சித்து வருவதாகவும் அவ் இதழ் மேலும் தெரிவித்துள்ளது.

ஐ.தே.க விஞ்ஞாபனம் தமிழர்மீது போர்பிரகடனம்

-கொழும்பு வார இதழ் கருத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ்மக்கள் மீதான போர்ப்பிரகடனமே என கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. அது மேலும் தெரிவிக்கையில், இலங்கை - இந்தியஒப்பந்தத்தின்வரையறைகளின் உள்ளேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும் என்பதும், வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு தாம் எதிர்எனவும், அதிகாரப்பகிர்வுக்கான பேச்சுக்களுக்கு மறுக்குமிடத்து பலாத்காரம் பிரயோகிக்கப்படும் என்பதும், ஐ.தே.கவின் அணுகுமுறை ஒரு திட்டவட்டமான போர்ப்பிரகடனமே என அவ் இதழ் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்க்கட்சிகள் அனைத்தும் வட-கிழக்கு இணைப்பு விடயத்தில் உறுதியாக இன்றுவரை இருப்பதும், இதனை ஐ.தே.க. எதிர்ப்பதாக கூறுவதும், பேச்சுகளுக்கான கதவை மூடியுள்ளோம். என்பதையே ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுவதாக அமைகிறது எனவும் அவ் இதழ் தெரிவித்துள்ளது.

சு.கட்சியின்தலைமைத்துவம் சாதாரணருக்கு கிட்டாது

-திலக் கருணாரத்னா

(கொழும்பு)

சிரத்தையுடன் உழைக்கும் கற்ற இளைஞர்களுக்கு சுதந்ரக் கட்சியில் மதிப்பு இல்லை. முன்னின்று செயற்படும் இளைஞர்கள் தொடர்பாக அக் கட்சியின் தலைவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். இவ்வாறு களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஹெல உறுமய' அமைப்பாளர்களில் ஒருவருமான திலக்கருணாரத்னா தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும்கூறுகையில், கட்சியில், ஒதுக்கப்பட்ட ஒருவனாக இருக்க நான் விரும்பவில்லை. சுதந்திரக்கட்சியை 21 ஆம் நூற்றாண்டிற்குரிய ஒரு கட்சியாக்க வேண்டும் என்றே விரும்பி இருந்தேன். ஆனால் கட்சியில் இருக்கும் தலைவர்கள் அதற்கு இடமளிப்பதாக இல்லை. ஆனால் என்னை கட்சியிலிருந்து விலக்கினர். கடந்த 35 வருடங்களாக சுதந்திரக்கட்சியில் ஒரே தலைமைத்துவமே இருந்து வருகிறது. கீழ் மட்டத்திலிருந்து வரும் இளைஞர்களுக்கு அங்கே சந்தர்ப்பம் இருக்கவில்லை. இந்த யுகத்தில் மட்டுமல்ல இனி எந்த யுகத்திலும் சு.க வின் தலைமைத்துவம் சாதாரண ஒருவருக்கு கிட்டாது எனவும் தெரிவித்தார்.

ஐ.தே.க வெற்றிபெறுவதை எவரும் தடுக்கமுடியாது

-மனோ விஜேயரட்ன-

ஐ.தே.கவின்இறுதிப்பயணம் எவருமேஉயிருட்ட முடியாது

தற்போது ஆட்சியில் இருக்கும் சர்வாதிகாரியின் அரசு தனது இறுதிப் பயணத்தை நெருங்கிவிட்டது. இனிமேல் எவராலும் இதற்கு உயிரூட்ட முடியாது. இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பாக கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார்.

தெல்தெனிய தொகுதியின் மெதமகநுவர நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், நாடு என்னவானாலும் பரவாயில்லை என்று கருதி தமது தேவைகளையும், இலாபத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டு இன்று அமைச்சர்கள் செயற்படுகின்றனர். ஐ.தே.க கட்சியினர் தமது நலன் விரும்பிகள் பயன்பெறக் கூடிய வகையிலேயே எல்லாத் திட்டங்களையும் தீட்டி செயற்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின் வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1994.09.16 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆற்றுகைக் கலையில் சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)-

1. வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)
2. பண்ணிசை (கர்நாடக சங்கீதம்)
3. வாத்தியங்கள் - வீணா (கர்நாடக சங்கீதம்)
4. வாத்தியங்கள் - மிருதங்கம் (கர்நாடக சங்கீதம்)
5. வாத்தியங்கள் - வயலின் (கர்நாடக சங்கீதம்)
6. பரதநாட்டியம் (நடனம்)

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதி காண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 6050-10 X 250 - 8,550/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவுடன்) சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதி காண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சம்பள அளவுத்திட்டம்

சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1 - ரூபா 12,725 - 8X325 - 15,325/

சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 11 - ரூபா 10,650- 5 X 325 - 12,275/-

உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)-ரூபா 5,270- மாதமொன்றுக்கு (நிலையானது)

இத்துடன் [illegible]வையிலுள்ள வேலை நிறைவேற்[illegible]படியாக 1994 திசெம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 % சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்

நினைவு கூருகின்றோம்...

06-08-1994...

1987ஆம் ஆண்டு திருமலைச் சந்தையில் தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடியினை ஏற்றும்போது சிறிலங்கா ஊர்காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான நாட்டுப்பற்றாளரான,

ஆறுமுகநாதன் (- -- -)

1988 -ம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

2-ம் லெப். விக்ரர் (நேசராசா விக்ரோறியன் ,- கணேசபுரம், திருநகர் - கிளிநொச்சி)

லெப். சோமேஸ் (நடராசா காந்தகுமார்-பலாலி மத்தி, வசாவிளான் - யாழ்)

1989 -ம் ஆண்டு கிளிநொச்சி - 7-ம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

வினோதன் (செபஸ்தியாம்பிள்ளை சிறியோகராசா - கனகபுரம் - கிளிநொச்சி)

1990 -ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

பரணி (- - மீசாலை - சாவகச்சேரி)

ஆனையிறவில் எதிர்பாராவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த,

பாலன் (ஞானபாலன் ஆரியவன்சன் - எல்லையடி, கண்டி வீதி, உமையாள்புரம் - கிளிநொச்சி)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். பாருதி-கண்ணன் (விஷ்ணுகாந்தி கருணாகரன் - மீசாலை தெற்கு -சாவகச்கேரி)

சித்திரன் (பரமானந்தம் ஜீவானந்தம் - சந்தை மேற்கு வீதி, -பருத்தித்துறை)

பயஸ் (- - - - -)

1991 -ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா 'இராணுவ முகாம் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

லெப். பானு (திருச்செல்வம் தெம்சிகுமார் முல்லைத்தீவு)

லெப். கீரன் (சின்னத்தம்பி ரமேஸ்குமார் - குமுழமுனை - மணலாறு)

கலைச்செல்வன் (- - - -)

சங்கர் (- - - - -)

ஆனையிறவில் முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

சுதாகர் (இராசதுரை சுகுமார் - வளலாய்-அச்சுவேலி)

பூர்ணிமா (வசந்தி பேரம்பலம் - கொழும்புத்துறை கிழக்கு - யாழ்)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

2-ம் லெப். எழில்ராஜ் (கணபதிப்பிள்ளை குணதாசன் - பிரதானவீதி, திருக்கோயில்-அம்பாறை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா முப்படைகளினாலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைவேங்கைகள்

பெருவிழாவும், இலக்கிய விழாவும் இன்றும் நாளையும் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய அரங்குமைதான முன்றலில் நடைபெறும். (24)

கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தில் தாச்சி விளையாட்டு நடுவர்களுக்கானகலந்துரையாடல்ஒன்று நாளை ஞாயிறுகாலை 9.00 மணிக்கு கோண்டாவில், அரசியல் துறை, யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாவட்டத்தில் தாச்சி விளையாட்டுக்கு நடுவர்களாகக் கடமையாற்றும் சகலரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கிறது.

★ ★

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல நிர்வாக சபை உறுப்பினர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒருவர் கைது

(திருமலை)

திருமலை மாவட்டம் மாவடிச்சேனைப்பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரைக்கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 29-ம் திகதி மாலை 3 மணியளவில் வெருகல்முகத்துவார இராணுவத்தினரே அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துகுக்மார் காளிராசா என்பவரையே கைது செய்துள்ளனர்.

-மனோ விஜியரத்தினா

(கொழும்பு)

திருமதி சந்திரிகா அல்லவானிலிருந்து வால்நட்சத்திரமே இடிந்து விழுந்தாலும் இத்தேர்தலில், ஐ. தே.க. வின் வெற்றியை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. அந்த அளவுக்கு எமக்கு மக்களின் ஆதரவு உண்டு. இவ்வாறு கேகாலை மாவட்ட ஐ. தே. க. வேட்பாளரும், தோட்டச் சேவைகள் அமைச்சருமான மனோ விஜியரத்தினா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ. தே. க. எவரையும் பட்டினி போட்டதில்லை. ஏழைகளின் கஷ்டத்தை உணர்ந்து அவர்களின் விடிவுக்கு பரிகாரம் காணும் வகையிலேயே இக்கட்சி செயற்பட்டு வருகிறது. இந் நாட்டில் வாழும் சகலரையும் பட்டினி போட்ட சுதந்திரக் கட்சி இன்று பொய் வாக்குறுதிகளைக் கூறி வாக்கு கேட்டு வருகிறது எனவும் தெரிவித்தார்.

பரிசு பெற்ற மாணவர்கள் காசோலை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

1991 ம் ஆண்டு யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட ஆண்டுப் பரீட்சைகளில் பல்கலைக் கழக பரிசு பெற்றவர்கள் சான்றிதழ்களையும் காசோலைகளையும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/கல்விக்கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளும்படி கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார்.

தமிழர், முஸ்லிம்களை பொ.ஐ.மு புறக்கணிப்பு

-எட்வின் விக்கிரமரட்ணா

பதுளை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் எவரும் இடம் பெறவில்லை. இதன் மூலம் பதுளைமாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் வாக்காளர்களை பொதுஜன ஐக்கிய முன்னணி புறக்கணித்து இருப்பது நன்கு புலனாகின்றது இவ்வாறு பதுளை மாவட்ட ஐ.தே.க வேட்பாளரும், பதுளை மாவட்ட முன்னாள் எம்.பியுமான எட்வின் விக்கிரமரட்ணாகூறியுள்ளார்.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி உறுப்பினராக விளங்கிய இவர் இப்போது ஐ.தே.க வின் வேட்பாளராகி இருப்பது குறிப்பிடத்தக்கது. தியத்தலாவ சந்தை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், சுதந்திரக் கட்சியில் தலைமையின் தாளத்துக்கு ஏற்ப ஆடவேண்டிய நிலை கட்சியின் உறுப்பினர்களுக்கும், தொண்டர்களுக்கும் இருக்கிறது

தற்போது சந்திரிகா அலை ஒன்று வீசுவதாக சிலர் பேசிக் கொள்கிறார்கள் அது என்ன அலையென்று எனக்குத் தெரியவில்லை அந்த அலையினால் அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்-

வீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

ஆ) ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10 % மும் ஒவ்வொரு காலாண்டின் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஸ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும், தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23X10 ச.மீ, அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு-13, ஆட்டுப்பட்டித்தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-08-03

(சி/10052)

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10051)

அப்பளம் தயாரித்தல் தொழிலில் அனுபவம் உள்ளோர் தேவை

எமது சங்கத்தினால் அமுல்படுத்தப்படவிருக்கும் அப்பளம் தயாரித்தல் திட்டத்திற்கு நீண்ட கால அனுபவமும் பயிற்சியும் உள்ளவர்கள் உடன்தேவையாக இருக்கிறது. எனவே மேற்குறிப்பிட்ட தகைமை உடையவர்கள் 15-08-94-ம் திகதிக்குள் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

பதில் பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு, நயினாதீவு பல நோ. கூ சங்கம்
201/13-ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.

(சி-10058)

நியுலலிதா ஜுவல்லர்ஸ்
ஆதரவுடன்
புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும்
மாபெரும்
மாட்டுவண்டி சவாரிப்போட்டி
காலம்:- 7.8.1994 ஞாயிற்றுக்கிழமை
இடம்:- விக்னேஸ்வரா சவாரித்திடல்
07-08-1994 ஞாயிறு நடைபெறவிருந்த போட்டி நாளை மறுதினம் 8-8-94 திங்கட்கிழமை நடைபெறும்.
புதிய லலிதா நகைமாடம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-10059)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்

நல்லைக்குமரன் பாடல்கள் இன்றைய நிலை கூறுவன

- பேராசிரியர் சண்முகதாஸ்

(யாழ்ப்பாணம்)

''ஈழத்து எழுச்சிப் பாடல்கள் இன்று நல்லைக்குமரன் பாடல்களாக இன்னொரு தன்மையில் வெளிவருகின்றன''

இவ்வாறு அண்மையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற நல்லைக்கந்தன் பக்திப்பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை நிகழ்த்துகையில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவித்தார்.

இவ் ஒலிப்பதிவு நாடாவை திரு.சபா ஜெயராஜா வெளியிட்டு வைத்தார்.

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், திரு. சண்முகதாஸ் தெரிவிக்கையில் இந்த நல்லைக்கந்தன் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள 11 பாடல்கள் எல்லாமே எங்களுடைய இன்றைய நிலையைக் கூறுவனவாகவுள்ளன.

அத்துடன் சிறந்த கவிஞரான புதுவை இரத்தினதுரையின் பாடலும் வர்ணராமேஸ்வரனின் குரல்வளமும் கண்ணனின் இசையும் சேர்ந்து மிகச்சிறந்த ஒரு ஒலிப்பதிவு நாடாவை எமக்குத் தந்துள்ளன என தெரிவித்தார். [பா] [தி]

மண்ணெய் விநியோகம்

(குருநகர்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் 10 ஆம் கட்ட 4. லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஒரு குடும்ப அட்டைக்கு 4 லீற்றர் மண்ணெண்ணெய் 1 லீற்றர் 25.00 ரூபா வீதம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (21)

பயிற்சிக் கருத்தரங்கு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எழுபது சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (24)

பண்ணிசை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு

(கொழும்புத்துறை)

அகில இலங்கை இசைப் பேரவையும், இந்து இளைஞர் பேரவையும் இணைந்து நல்லை கந்தன் உற்சவ காலத்தில் நல்லை ஆதீன மண்டபத்தில் தினமும் காலை 9-12 மணிவரையும், மாலை 3 - 5 மணிவரையும் பிரார்த்தனை, பண்ணிசை பேச்சு, குறுநாடகம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளன. (24)

கலந்துரையாடல்

வலிகாமம் கோட்ட. கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

தென்பகுதியில் வன்செயல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் இதுவரை 1012 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவாம்,

இவற்றில் எட்டு கொலைச் சம்பவங்களும் அடங்கும் என தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

31-ம் நாள் நினைவஞ்சலி

யாழ் மாவட்டத்திற்கான

ஜேர்மனி உதவித் திட்டம் அரசு தலையீட்டால் நிறுத்தம்

(கொழும்பு)

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட அகதிகளுக்கென வழங்கப்பட்டு வந்த உதவிநிதியை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இந்நிதி உதவியை இடைநிறுத்துவதென முடிவெடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக வழங்கப்படவிருந்த சுமார் 11 மில்லியன் ரூபா நிதி உதவி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

உயரதிகாரிகளுக்கு காணி அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சின் செயலாளர்கள், தளபதிகளுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நீதித்துறை உத்தியோகத்தர்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு காணிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சின் செயலாளர்கள், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோருக்கு காணிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை வீடமைப்பு நிர்மாணத்துறையின் நகர அபிவிருத்தி அமைச்சர் சிறிசேன கூரே கோரியுள்ளார்.

வீடமைப்பு அதிகாரசபை, நகர அபிவிருத்திச் சபை ஆகியவற்றுக்கு சொந்தமான கொழும்பு மாநகரசபைக்கு வெளியேயுள்ள காணிகளை இவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவிற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குழாய்க் கிணறு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருக்குடும்ப கன்னியர் சபை ஊடாக யாழ் சென்றோக்ஸ் வித்தியாலயத்தில் இருந்த குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 15 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டு அப்பணத்தைக் கொண்டு மேற்படி பாடசாலை நிர்வாகம் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்து பாடசாலையின் குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்துள்ளது. (88)

ஆடு வளர்ப்பு ஊக்குவிப்பு

பளை வட்டத்திற்குட்பட்ட கிராமிய உற்பத்திக்குழுக்கான மாதாந்த கலந்துரையாடல் 23.07.1994ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு கிராமிய உற்பத்திக்குழு பிரிவிலும் இரண்டு பயனாளிகள் வீதம் 20 பயனாளிகள் தெரிவு செய்து ஒரு பயனாளிக்கு கடனடிப்படையில் 02 நல்லின ஆடுகள் வீதம் வழங்கிஆடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. தற்போது இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கென 1,75,000-, ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு

கண்காட்சி, கருத்தரங்கிற்கு உள்.திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் திணைக்களத்தால், வருடாந்தம் நடாத்தப்படும் ஈழத்துநூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், பாரம்பரிய மருத்துவக் கண்காட்சியும் கருத்தரங்கும், எதிர்வரும் செப்ரம்பர் மாதமளவில் நடைபெறவுள்ளது.

சிறந்த சனசமூக நிலையம், சிறந்த பாலர் பாடசாலையும் ஆசிரியையும், ஓவியப் போட்டி, புகைப்படப் போட்டி, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், அறிவியல், குழந்தை இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த நூல்களுக்கான போட்டி, சிறந்த நூல் கட்டமைப்பு, சிறந்த கையெழுத்துச்சஞ்சிகை ஆகிய போட்டிகளும் இடம்பெறும்,

மேலும், கண்காட்சியில் தங்களுடைய ஆக்கங்களை காட்சிக்கு வைக்க விரும்பும் பாரம்பரிய வைத்தியர்கள், ஓவியர்கள், சிற்பவல்லுனர்கள், புகைப்படக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் வெளியீட்டாளர்கள் ஆகியோர் நேரிலோ, கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளும்படி பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுக் கொள்கிறார்.

ஊக்குவிப்பு கொடுப்பனவு

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கம் தனது பணியாளர்களுக்கு இலாப பங்கீட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்கியுள்ளது. கடந்த திங்களன்று சங்கப் பணிமனையில் சங்கத்தலைவர் சிறில் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் கூட்டுறவு திணைக்கள பிரதி ஆணையாளர் குணராசா இதனை வழங்கினார்.

கண்காட்சி

(பருத்தித்துறை)

கரவெட்டி திருஇருதயக்

மாட்டுவண்டில்

காயமுறும் படையினருக்கு 5 ஏக்கர் காணி வழங்கப்படும்

- திட்ட அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

சேவையிலிருந்து ஓய்வு பெறும் அல்லதுகாயமடைந்து சேவையிலிருந்து விலகும் படைவீரர்களுக்கு 5 ஏக்கர் வீதம் விவசாயக் காணிகள் வழங்குவதற்காக சுமார் பத்தாயிரம் ஏக்கர் காணி பயன்படுத்தப்படவுள்ளதாக திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்ரம வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட திட்டத்தை விபரித்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், சேவையிலிருந்து மரணிக்கும் படையினரின் குடும்பத்தவர்களுக்கும் இதன் மூலம் காணி வழங்கப்படுமென கூறினார். இதுவரை 5613 படைவீரர்கள் கொல்லப்பட்டும், 6995 பேர் காயமடைந்தும் உள்ளனரெனவும் அவர் மேலும் கூறினார்.

அறிவித்தல்

வேலணை பல நோ. கூ. சங்கம் நடாத்தும்

சர்வதேச கூட்டுறவு தின விழா-1994

இடம் :- யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
காலம் :- 07-08-94-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு.
தலைமை :- திரு. பொ. மாசிலாமணி அவர்கள் தலைவர், வேலணை ப. நோ. கூ, சங்கம்.

நிகழ்ச்சிகள்

01) கொடியேற்றல்
02) வாழ்த்து நடனம்
03) சிறப்புரைகள்
04) கூட்டுறவுப் பெரியார்களைக் கௌரவித்தல்
05) போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்கள், பணியாளர்கட்கான பரிசில்கள் வழங்கல்
06) வேலணை பல. நோ. கூ. சங்கப் பணியாளர்கட்கான போனஸ் வழங்கல்.
07) போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள்
08) இன்னிசை கானம் - திரு. எஸ். ஜி. சாந்தன் குழுவினர்

விழா சிறப்புற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை பல நோ. கூ. சங்கம் [வ.து]
(சி-10056)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி

கேள்விக்கூற்று கோரல்

மேற்படி எமது சங்கத்திற்கு சொந்தமான லொறிகளினால்பாவிக்கப்பட்ட பழைய உதிரிப்பாகங்களும்; இசுசு லொறிக்கு பொருத்தக் கூடிய சில புதிய உதிரிப் பாகங்களும் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்பியோர் 19 - 08 - 94 முற்பகல் 10 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- ★ இவ் உதிரிப்பாகங்களை காரியாலய வேளைகளில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்

செல்வி கணேசலிங்கம் நிரஞ்சிதா

மலர்வு: 14-09-1991 உதிர்வு: 07-07-1994

வெள்ளை மனம் கொண்ட செல்வம் நீ
வெந்து போக வைத்துப் பிரிந்தாயே
- எம்மை

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

7-7-1994 அன்று இறைபதம் சேர்ந்த அன்புச் செல்வியின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட யாவருக்கும் எம் நன்றிகள்.

6-8-1994 இல் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பிதழை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்

பிள்ளையார் கோவிலடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (9032)

கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கென 1,75,000-, ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என த.பொ. மே. நிறுவன செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

மலசலகூடம் அமைப்பு

(தொல்புரம்)

சுத்தம் சுகாதாரத்தை கடைப்பிடிக்கும் பொருட்டும், பாவனையாளர்கள் வியாபாரிகள் வசதிகருதியும் வலிமேற்கின் பொதுச் சந்தைகள் இரண்டில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வலிமேற்கு பிரதேச சபையினர் சுழிபுரம் சத்தியக்காடு, சங்கானை ஆகிய இடங்களில் அமைந்த இரு பொதுச் சந்தைகளில் இந்த மலசலகூடங்களை அமைத்துள்ளனர். (41)

முதலிடம் பெற்றது

(கொழும்புத்துறை)

யாழ். திருமறைக்கலாமன்றத்தினரால் கடந்த 31 ஆம் திகதி ஞாயிறு நடாத்தப்பட்ட கூத்தரங்கு போட்டியில் பாஷையூர் வளர்பிறை இளங் கலைஞரின் பாஸ்கா ஒளியேற்றிய பத்திரிசியார் நாட்டுக்கூத்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

மும்முனைப் போட்டியில் வளர்பிறையினர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (24)

நிரந்தர நியமனம்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி போதிக்கும் 104 பயிலுனர் ஆசிரியர்களுள் 83 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கடிதங்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கல்விக் கோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (86)

கண்காட்சி

(பருத்தித்துறை)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் கலையகம் ஓவியக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் கலைஞன். சிவகுருநாதன், ரகுஹரனின் ஓவியக்கண் காட்சி இன்றும், நாளையும், நடைபெறுகின்றது. யாழ். கல்வித்திணைக்கள சித்திர உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சிவசுப்பிரமணியம் (ரமணி) ஓவியக்கண்காட்சியைத்திறந்துவைக்கின்றார். (25)

சுயதொழில் ஊக்குவிப்பு

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சிக்கான கடன்களை வழங்கி வருகின்றது.

அந்தவகையில் உடுவில் வட்டத்தில் 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 10,000/- வீதம் கடன் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சிக் கோட்டத்திலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வருவதாகவும் அவர்களுக்கு அடுத்த மாத முடிவுக்குள் கடன் வழங்கப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கின்றது.

தெருக்கூத்து

(பருத்தித்துறை)

வடமராட்சி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுப் பிரிவினரின் ''உணர்ந்தெழுவோம்'' தெருக்கூத்து வடமராட்சியின் பல பகுதிகளிலும் காண்பிக்கப்பட்டு வருகிறது. பெருந்திரளான பொது மக்கள் இத் தெருக்கூத்தை கூடி நின்று பார்த்து வருகின்றனர். இத் தெருக்கூத்து பொது மக்களின் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றது. (25)

மாட்டுவண்டில் சவாரிப்போட்டி ஒத்திவைப்பு

புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நாளை நடத்தவிருந்த மாட்டுவண்டில் சவாரிப்போட்டி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. இப்போட்டிகளை நாளை மறுதினம் புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா சவாரித்திடலில் நடைபெறும்.

விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் விசேட கூட்டம் யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையம் பணிமனையில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி கு. மகேசன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 10 - 00 மணிக்கு நடைபெறும் (24)

குறிப்பு:- ★ இவ் உதிரிப்பாகங்களை காரியாலய வேளைகளில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
சாவ. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

(03-08-94) (சி-10053)

வேலணை பல நோ. கூ. சங்கம் (வ-து)

துவிச்சக்கரவண்டி விநியோகம்

துவிச்சக்கரவண்டி தேவையான வேலணை பல நோ. கூ. சங்க அங்கத்தவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்

(சி-10055)

போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒருபோட்டோ அல்பம் இனாம்
★ போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல். (சாம்பிள் பார்வையிடலாம்)
★ கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
★ புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

★ கொழும்பு கலைக்கூடம் ★

(கொழும்பு ஸ்ரூடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

அவசியசேவை ஆணையர் வெளிநாடு செல்ல ஆயத்தம்?

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் புத்திக சிறிவர்த்தனா இவ்வாறு வெளியேற இருப்பதாகவும், ஐ. தே. க தோல்வியடையுமாயின் இவர் நாட்டிலிருந்து வெளியேறிவிடுவார் என்றும் கூறப்படுகிறது.

இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பூர்வாங்க அறிக்கையொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இவ் அறிக்கை மீது பூர்வாங்க விசாரணை நடத்தப்பட்டிருப்பதுடன் இதன் ஒரு பிரதி பொது ஜன மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

லொறித் திருத்தத்திற்கான கேள்விக் கூற்று பெறல்

மேற்படி எமது சங்கத்தின் 28 | 1039 இல. இசுசு லொறியின் உடல் கோப்பு மீள் புனரமைப்புச் செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றது. (இதில் ரிங்கர், வர்ணம் பூசுதல், வயறிங் வேலைகள் அடங்கும்) இவ் வேலைகளைச் செய்ய விரும்புவோர் 12-8-94 -ம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்

குறிப்பு: காரியாலய நாட்களில் காலை8-00 — 10-00 மணிவரை சங்க தலைமைக்காரியாலயத்தில் தொடர்பு கொண்டு லொறியைப் பார்வையிடலாம்.

பதில் பொது முகாமையாளர்
புங்குடுதீவு - நயினாதீவு பல.நோ.கூ.சங்கம்
201/1, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-10047)

வட பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசம்

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருள்களும், நிறுவனமும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கு விதிக்கு அமைய பின்வரும் முறைகளை கடைப்பிடிக்கவும்.

1. உற்பத்தி நிறுவனம் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளல்.
2. நிறுவனத்தின் குறியீடு (லேபல்) பதித்தல்.
3. உற்பத்தியாகும் காலம், முடிவடையும் காலம் பதித்தல்.
4. உற்பத்திக்கு சேர்க்கப்படும் மூலப் பொருட்கள் குறியீட்டில் (லேபலில்) பதித்தல்.
5. 01 09 1994 முதல் ஒரு கிலோ உப்பின் ஆகக்கூடிய விலை ரூபாய் 10. 50 சதமாக விற்றல்.
6. உற்பத்தி நிறுவனத்தின் முடிவடைந்த தேதி உடைய பொருள்கள் விற்பனைக்குத் தடை.

நல்லூர்க் கண்காட்சி - 1994

30. 07- 1994ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படவிருக்கும் 'நல்லூர்க் கண்காட்சி 1994ல்' உங்களது புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய தொழில் நுட்பங்கள், முன்மாதிரியாக செய்கை பண்ணப்பட்டுள்ள பயிரினங்கள் மற்றும் கால்நடைகளை காண்பிக்க விரும்புவோர்கள் பின்வரும் விண்ணப்பப்படிவ மாதிரியினை சுயமாக தயாரித்து எதிர்வரும் 10-08-1994க்கு முன்னர் கிடைக்குமாறு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்துக்கோ அல்லது மாவட்ட, கோட்ட, வட்ட கிராமிய உற்பத்திக்குழு அலுவலகத்துக்கோ அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:-
02. விலாசம்:-
03. வயது:-
04. 1. கிராமிய உற்பத்திக்குழுப்பகுதி:- 2. வட்டம்:-
3. கோட்டம்:- 4. மாவட்டம்:-
05. போட்டியின் வகை:-
(விவசாயத்துறை, விலங்குவேளாண்மைத்துறை, கைத்தொழிற்துறைகளில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிடுக)
06. நீங்கள் செய்த ..... துறையில் எவ்வகையானவற்றைகாட்சிக்கு வைக்க உள்ளீர்கள் என்பதைக் குறிப்பிடுக.
உதாரணம் விவசாயத்துறையாயின் கத்தரிச்செடி எனக் குறிப்பிடவும்.
07. அதனைத் தெரிவு செய்தமைக்கான காரணம்
உதாரணம் கத்தரிச்செடி ஆயின் குன்றிய பிரதேசங்களில் வளரும் பண்பு கொண்டது என்றோ கால்நடை (பசு) ஆயின் ஒரு நாளைக்கு மிகக்கூடிய பாலைத்தரக் கூடியது என்றோ குறிப்பிடுக.

.....

08. மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் போட்டி விதிக்கு அமைய நடப்பேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

....
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

இவர் எமது பகுதி கிராமிய உற்பத்திக் குழுவை/ வட்டத்தை/ கோட்டத்தை சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

.....
உறுதிப்படுத்துபவர் கையொப்பம்
கிராமிய உற்பத்திக் குழுத்தலைவர்/
வட்டகோட்ட தொடர்பாளர்/ இணைப்பாளர்.

திகதி:- (சி-10041)

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை, ஆபரணக் கைத்தொழில் அல்லது தொழில் வளவுகளை பதிவு செய்தல்

1-3-94-ம் தேதியன்று நடைமுறைக்கு வந்த 1993-ம் ஆண்டில் 50ஆம் இலக்கத் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின 17-ம் பிரிவு பின்வருமாறாகும்.

1) ஆளெவரும் ஏதேனும் வளவுகளில், அத்தகைய வளவு அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி ஆபரணத் தொழில் எதனையும் கொண்டு நடத்துதல் ஆகாது.

நுகர் பொருட்கள் எடுத்துச் செல்லவும் கட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள வாகரைக்கு பொதுமக்கள் பொருட்களை எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகரைப்பகுதிக்கு கூடுதலான பொருட்களை பொதுமக்கள் எடுத்துச்செல்வதற்கு படையினர் தற்காலிகமாக தடை விதித்துள்ளனராம்:

விபத்தில் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

மிகவேகமாக சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் சைக்கிளின் முன் போக்உடைந்து கீழே விழுந்து படுகாயமடைந்ததால் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

மேற்படி சம்பவத்தில் மரணமானவர் ஐந்துபிள்ளைகளின் தந்தையான ஜெயராசா என்பவராவார் இச்சம்பவம் அண்மையில் கிளிநொச்சி திருவையாறு என்னும் இடத்தில் இடம்பெற்றது. (88)

1- வது ஆண்டு திவசம்

அமரர் திருமதி
யோகசௌந்தரி நகுலேஸ்வரன்
பருத்தித்துறை
திதி :- 06 08. 1994

அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

''யோகவாசா''
புலோலி கிழக்கு, கணவரும், குடும்பத்தினரும்.
பருத்தித்துறை. (9033)

10-ம் ஆண்டு நினைவலைகள்



செயலாளர்

வட பிராந்திய வர்த்தக சங்க சமாசம்.

(சி- 10044)

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்.

அறிவித்தல்

கூட்டுறவாளர் தீனவிழா

சகல அங்கத்தவர்கட்கும்,

அன்புடையீர்,

மேற்படி தினவிழா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 6-8-94-ந் திகதி மாலை 2.00 மணிக்கு நடைபெற இருப்பதால், சகல அங்கத்தவர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்வதுடன், பங்குபற்றுபவர்களுக்கு அன்று மாலை 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வாகன வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்

(சி-10043)

யாழ் கல்வித்திணைக்களமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடாத்தும் 'தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறிகள்'

விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

பயிற்சி நெறி	நடைபெறும் இடம்
1. உடை அமைத்தல்	யா-இணுவில் மத்திய கல்.
2. மோட்டார் சைக்கிள் திருத்தல்	யா-இணுவில் மத்திய கல்.
3. பனம்பொருள் கைப்பணி	கோப்பாய் மகா வித்தி.

தகைமைகள்:

1. குறைந்தது ஆண்டு 8 வரை கல்வி பயின்று பாடசாலையை விட்டு நீங்கி தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்கள்.
2. வயதெல்லை:- 25 (ஆண், பெண் இருபாலாரும்)

விண்ணப்ப முடிவு திகதி: 12. 08. 94

★ விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரங்களுடன் உரிய பாடசாலைஅதிபருக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

(சி-10042)

---

2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஏதேனும் வளவுகளுக்குள் ஆபரணக் கைத்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரான ஆளெவரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, மூன்று மாத காலப் பகுதியொன்றுக்குள்ளாக, அதிகார சபையுடன் அத்தகைய வளவுகளைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

3) ஆபரணக் கைத்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரும் அதிகார சபையிடமிருந்து ஏதேனும் உதவியைப் பெற விரும்புகின்றவரான ஒவ்வொரு ஆளும் அதிகார சபையுடன் அத்தகைய கைத்தொழிலைப் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''வளவுகள்'' என்பது ஆபரணத் தொழில் அல்லது வியாபாரம் கொண்டு நடாத்தப்படுகின்றதும் அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படுகின்றதுமான வளவுகள் என்று பொருளாகும்.

ஆபரணத் தொழிலை அல்லது கைத்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு ஆளும் மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்திற்கிணங்க அதிகார சபையுடன் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். 1994 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் அண்மையில் உள்ள அதிகார சபைக்கு, சொந்த முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது பின்வரும் அதிகார சபையின் பிராந்திய அலுவலகத்திற்கு நேரில் செல்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்:-

1. பிராந்திய முகாமையாளர் [கொழும்பு]
   இலங்கை இரத்தினக்கல் ஆபரண பரிவர்த்தனை நிலையம்,
   310, காலி வீதி, கொழும்பு 03.
2. பிராந்திய முகாமையாளர்,
   தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை,
   பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.
3. பிராந்திய முகாமையாளர்,
   தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை.
   எஹிலியகொட.
4. பிராந்திய முகாமையாளர்,
   தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை,
   இல. 6, வெடிகும்புர வீதி, மொனராகல.
5. பிராந்திய முகாமையாளர்,
   தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை,
   ராஜ வீதி, மாத்தளை.
6. பிராந்திய முகாமையாளர்,
   தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை,
   மாத்தறை.

தலைவர்

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை,

இல. 25, காலிமுகம் டெறஸ்,

கொழும்பு-3.

(சி-10046)

ஆழியில் ஐக்கியமாகிய ஆழிக்குமரன் ஆனந்தன்

மலர்வு: 25 5 43 உதிர்வு 6 8 84

கின்னஸ் சாதனை புகழ்

வி. செல்வக்குமார் ஆனந்தன்

B A. LLB (Cey) B. Sc. (Lond) சட்டத்தரணி

திதி: 16 - 08 - 94

வங்கக் கடலோரம் வல்வையம் பதியினிலே
பொங்கிடும் கடலலையின் புதுயுகம் படைத்திடவே
சாதனை நாயகன் ஆனந்தன் உதித்தான்
பதினெட்டாம் வயதினிலே பாக்கு நீரிணையை
பாங்காக நீந்திக் கடந்து
மீண்டும் 'ஆழிக்குமரனென' பெயரெடுத்தான்
முப்பத்து மூன்றாம் வயதினிலே பாக்கு நீரிணையை
நீந்தி இந்தியா சென்று
மீண்டு வந்து சாதனை பதியும் ஏடாம்
கின்னசில் தன்னைப் பதித்து
சாதனைத்தொடரில் மீண்டும் நூற்றெண்பத்தேழுமணி
சயிக்கிளையும் யோட்டிச் சரித்திரமாகிப் பின்னர்
நூற்று முப்பத்தாறு மணி '' போல் பஞ்சிங் ''
சாதனையும் ஏட்டிலே பதிவு செய்து
ஒற்றைக்காலினிலே முப்பதொடு மூன்றுமணி
நின்ற சாதனையும், ஒரு நிமிடநேரத்தில்
நூற்றம்பத்தைந்து தரம் இருந் தெழும்பி
'' ஹை கிக் '' என்ற சாதனையும்
எண்பது மணிநேரம் தவளைபோல்
தடாகத்தில் வாழ்ந்த சாதனையும் உலக
சாதனையாக கின்னசில் பதித்து சென்றான் - தமிழ்
ஈழத்துப் பெருமைதனை உலகுக்கு உயர்த்திவிட்டு
ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கையிலே
அரவணைத்தாள் கடலன்னை.

தற்போதைய முகவரி:- - சித்தப்பா குடும்பத்தினர்
' பொன்னா வில்லா '
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

(சி-10024)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்

சிந்தனைக்கு..

கொசுவைப் பெரிதாக்கி ஒட்டகத்தை
விழுங்கும் குருட்டு வழிகாட்டிகள்.
- இயேசுநாதர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 06-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

தமிழ் மக்களின் பேரில் சுயலாபம் தேடும் முயற்சி

யாழ். மாவட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் பாராளுமன்றம் செல்ல தமிழ்க் குழுக்கள் சில குடுமி பிடிச் சண்டையில் ஈடுபட்டுள்ளன. ஆயுதம் தாங்கிய ஒரு குழு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு மற்றைய குழுவிற்கு தடையாக இருப்பதாகவும், பிரசார வேலையில் ஈடுபடுவதற்கு தடையாக இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடும் செய்துள்ளது.

இவை யாவும் இடம்பெறுவது யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் சிறுதொகுதி மக்களைக் கொண்ட தீவுப்பகுதியிலேயே. யாழ். மாவட்டத்தில் தேர்தலை எவ்வாறேனும் நடத்துவதென்ற சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டத்தின்படி, யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியையும், மக்களையும் தவிர்த்து நடக்கும் இத்தேர்தலிலேயே தமிழ் குழுக்கள் பாராளுமன்ற ஆசனத்திற்காக இவ்வாறு மோதிக் கொள்கின்றன.

ஆனால் யாழ். மாவட்டத்தில் பெரும்பகுதி மக்களைக் கொண்ட பகுதியிலோ நடப்பது வேறாகவுள்ளது. சிறிலங்கா விமானப்படையும், கடற்படையும் இராணுவமும் மேற்கொள்ளும் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்கு மற்றும் துப்பாக்கிச் சூடு என்பனவற்றால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த இருதினங்களில் மட்டும் சிறிலங்கா ஆயுதப் படையினரின் தாக்குதலுக்கு ஆறு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 15க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பெருமளவு சொத்துடைமைகளும், தொழில் உபகரணங்களும் அழிக்கப்பட்டும் உள்ளன.

இந்நிலையில் தமிழ்மக்களின் பெயரால் பாராளு

பொறுமைக்கு எல்லையுண்டு ஐ. தே. க. செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்செயல்களில் யார் ஈடுபட்டாலும் நாம் கண்டிக்கிறோம். வன்செயல்களில் ஒரு சாரார் ஈடுபட்டால் அவற்றுக்கு எதிர் விளைவுகளும் இடம்பெறத்தான் செய்யும். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோது பொது ஜன ஐக்கிய முன்னணியினர் வன்செயல்களில் ஈடுபட்டனர். இவர்கள் இன்னமும் எமதுகட்சிக்காரர்களைப் பயமுறுத்துகின்றனர் எமது பொறுமைக்கும் எல்லையுண்டு என ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

விசும்பாயவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில், அமைச்சர் அதிகாரி கொலைக் குற்றம் ஒன்றில் சம்பந்தப்பட்டிருப்பது பற்றி கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அமைச்சர், அதிகாரி மீது ஐ. தே. க. நடவடிக்கை எடுக்குமாஎன கேட்டபோது, விசாரணைகள் முடிவுறவில்லை, அதன்பின்பே உரிய நடவடிக்கை பற்றி சிந்திக்க முடியும் என அவர் பதிலளித்தார். தென்பகுதியில் ஐ. தே. க. ஆதரவாளர்கள் வீடுகள் ஜே. வி. பி பாணியில் இரவு வேளைகளில் தட்டிப் பயமுறுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தோர் பராமரிப்பு நிதி ஒதுக்க அரசாங்கம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தவர்களைப் பராமரிக்க யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கோரிய ஒன்பது மில்லியன் ரூபா பணத்தை வழங்க சிறிலங்கா அரசாங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் 188 முகாம்களில் வசித்து வருகின்றனர். மொத்தம் 9,723 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் ஓலைகளால் வேயப்பட்ட மண் குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இக்குடிசை வீடுகளின் கூரைகள் பலத்த சேதமடைந்துள்ளன என்பதும், இக்குடிசைகள் அமைந்துள்ள முகாம் பகுதிகளில் போதுமான மலசலகூட வசதி இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தப் பகுதியில் தேர்தல் பிழையான செயற்பாடு

- யுக்திய ஆசிரியர் கருத்து

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு நிலைமையையும் கவனத்தில் எடுக்க வேண்டும் யுத்தப்பிரதேசங்களில் தேர்தல்கள் நடாத்தப்படுவது பிழையானவை என யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்,

சுதந்திரமான தேர்தலுக்கான நீதியான இயக்கத்தின் பேராளர் மகாநாட்டிலேயே அவர் இவ்வாறுகூறியுள்ளார். அப்பேராளர் மகாநாட்டில், வடமாகாணத்தில் யுத்த நிலைமை நீடிப்பதால் அங்கு தேர்தல் நடத்தக்கூடாது. எனவும் இன, மத, சாதி வேறுபாடுகளை கூர்மைப்படுத்தும் பிரசார நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டுமென்றும், மக்களை ஆவேசப்படுத்தும் பிரகடனங்களை தவிர்க்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில் தொழிற்சங்கவாதிகள், பத்திரிகையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பி பட்டியலில் ஐ. தே. க உறுப்பினர்கள்

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும், ஈபிடிபி குழுவினரின் வேட்பாளர் பட்டியலில் 4 ஐதேகவினரும் இடம்பெற்றிருப்பதாக தெரிய வருகிறது இதனை ஐ.தே.க வட்டாரங்கள் ஒத்துக் கொண்டுள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், ஈ.பி.டி.பி.க்கு கிடைக்கும் ஆசனங்களில் சரிபாதி ஐ.தேகவுக்குவழங்கப்படவேண்டுமெனவும், ஒற்றைப்படை ஆசனங்கள் கிடைக்குமாயின், மேலதிக ஆசனம் ஈ.பி.டி.பிக்கு விட்டுக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளன

மேசைப் பந்து பயிற்சிப் பாசறை

(கொழும்புத்துறை)

யாழ். நகரில் 15 வயதிற்குட்பட்ட ஆண்கள், பெண்களுக்கான மேசைப் பந்துப் பயிற்சிப் பாசறை ஒன்றை யாழ். வை. எம். சி. ஏ. எதிர்வரும் 18ஆம் 19ஆம் 20 ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் நடாத்தப்படவுள்ளது.

இப்பாசறை யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். இப் பாசறையில் யாழ் நகரின் முன்னோடி வீரர்கள் பங்கு பற்றுபவர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். (24)

தனித்தனி ஒப்பந்தங்களால் அரபுக்கள் பலவீனப்படலாம்

-பிரிய னைரியபி கருத்து

ஒரே வீட்டிலிருந்த அறுவர் உயிருடன் எரித்துக் கொலை

அமெரிக்காவில் காட்டுத் தீ லீவன்வேர்த் நகர் பாதிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் வடமேற்கே உஷ்ணம், வரட்சி காரணமாக காட்டுத்தீ பற்றியதால் கஸ்கேட் மலையிலுள்ள லீவன்வேர்த் நகரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 15000 அடிதூரம் வரை புகை மண்டலம் காணப்பட்டது. வாஷிங்டன், ஒரிகன், கிடாஹோ, மொண்டாணஉடா, நெவாடா, கலிபோர்னியா, வயோமிங் ஆகிய இடங்களில் 1,80000 ஏக்கர் நிலம் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளது.

தீயை அணைப்பதற்காக 836 தீயணைப்பு இயந்திரங்கள், 106 ஹெலி கொப்டர்களின் உதவியுடன், 14000 தீயணப்பு வீரர்கள் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் மணிக்கு 50மைல் வேகத்தில் உஷ்ணமான வரட்சிக் காற்று வீசியதாக தெரியவருகிறது.

'தடா' பயன்படுத்துவதில் கவனமாக இருக்கவேண்டும்

(சென்னை)

தடாசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்போர் விடயத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் மிகவும் வெளிப்படையாக இருக்கவேண்டும் என மனித உரிமைகள் கமிஷன் கேட்டுள்ளது.

இக்கமிஷன் அண்மையில் உள்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பித்த அறிக்கையொன்றில் கைது செய்யப்பட்டுதடாச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய பெயர்விபரங்களை மாதந்தோறும் வெளியிட வேண்டும் எனக்கேட்டுள்ளது.

தடாச்சட்டத்தை தன்னிச்சையாக பயன்படுத்துவதாக வெளியாகும் மக்களின் குறைகளை சுட்டிக்காட்டியே இவ்வேண்டுகோளை அது விடுத்துள்ளது.

கெம்பியா ஜனாதிபதிக்கு அயல் நாடுகள் அங்கீகாரம்

(பன்ஜீல்)

மேற்கு ஆபிரிக்க நாடான கெம்பியாவில் ராணுவப் புரட்சி ஏற்பட்ட பின் கானா, நைஜீரியா, சிராலியோன் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் புதிய ராணுவ ஜனாதிபதியான லெப்டினன்ட் யயாஜமேயை சந்தித்துள்ளனர்.

புதிய ஆட்சியாளர்களுடனான நட்புக்கு வழிதேடப் போவதாக இவ் வெளிநாட்டமைச்சர்கள் தெரிவித்துள்ளனர், கெம்பியாவின்புதியவெளி நாட்டு, பாதுகாப்பு அமைச்சர்களும் அண்மையில் செனகல் நாட்டுக்கும் விஜயம் செய்திருந்தனர்.

கெம்பிய ராணுவத்தில் 70 நைஜீரிய ஆலோசகர்கள் இருக்கிறார்கள் நைஜீரிய கேணல் ஒருவரே அதற்குத் தலைவராகவும் உள்ளார்.

இதேவேளை வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி ஜவாராவின் 10 அமைச்சர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் கெம்பியாவின் ராணுவ அரசு அறிவித்துள்ளது.

தொகுதிகளின் எல்லைகள் மீள நிர்ணயிக்கப்படும்

- இந்திய அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

1991-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் இந்தியாவிலுள்ள தொகுதிகளை பிரிக்க வகை செய்யும் அரசியல் சட்ட திருத்தம் விரைவில் இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருப்பதாக மத்திய அமைச்சர் எச். ஆர். பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் இல்லாத அளவு தொகுதிகள் பிரிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

காய்ச்சலால்

இந்நிலையில் தமிழ்மக்களின் பெயரால் பாராளுமன்றம் செல்லத்துடிப்பவர்கள் எதற்காக அங்கு செல்லத் துடிக்கின்றார்கள்? பாராளுமன்றம் செல்வதன் மூலம் தமிழ் மக்களின் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் எனக்கருதுகின்றார்களா? அல்லது படுகொலைகளை நிறுத்தலாம் என எண்ணுகின்றார்களா? அவ்வாறு அவர்களால் செய்ய முடியுமானால் ஏற்கனவே தமிழ் மக்களின் பெயரால் பாராளுமன்றம் சென்றவர்களால் ஏன் அதைச் செய்ய முடியவில்லை? செய்யமுடியாது என்றால் அவர்களால் செய்ய முடியாததை இவர்களால் எவ்வாறு செய்து முடிக்க முடியும்?

அதிலும் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே மேற்கொள்ளப்படும் என தெளிவாகவே கூறியுள்ளது. பொது ஜன முன்னணி வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வே ஒரேவழி எனக் குறிப்பிட்டாலும், தெளிவாகத் தனது கொள்கையை முன்வைக்கவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு சிங்களப் பாராளுமன்றத்தில் தீர்வு ஒன்றை எவ்வாறு காண முடியும்? ஆனால் இதனை தேர்தலில் போட்டியிடுபவர்கள் விளங்கிக் கொள்ளாமலும் இல்லை என்றே கூற வேண்டும்.

ரூபவாகினி தொலைக்காட்சியில்மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சைக் குழு இரண்டில் போட்டியிடும் ஒருவர் அண்மையில் நடத்திய தேர்தல் பிரசாரப்பேச்சேஇதற்கு சிறப்பானதொரு எடுத்துக்காட்டாக அமையக் கூடியதாகும். 'பாராளுமன்றம் சென்று கடந்த காலத்தில் எவரும் எதையும் சாதிக்கவில்லை. இம்முறை போட்டியிடுபவர்கள் யார் சென்றாலும் எதையும் சாதிக்கப் போவதில்லை. நாம் சென்றால் கூட அவ்வாறான நிலையே. ஆனால் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற நிலையில் எமக்கு வாக்களியுங்கள்' என்பதே அவரது கோரிக்கையாக இருந்தது.

இப்பேச்சானது ஒரு வேட்பாளரின் வாயிலிருந்து வருவது வேடிக்கையானது ஆகிலும் இது அவர்களின் கையாலாகாத்தனத்தின் காரணமாக அளிக்கப்படும் ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் போன்றதே, இந்நிலையில் தமிழ் குழுக்கள் பாராளுமன்றம் செல்வதன் நோக்கம், முழுமையாகத்தமது சுயலாபம் தேடுவதற்கென்பது தெளிவானது. இதில் கேள்விக்கே இடமில்லை.

-சிரிய ஜனாதிபதி கருத்து

(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதி ஹபீஸ் அல்- அஸாத் இஸ்ரேலுடன் தனியான சமாதான ஒப்பந்தங்களைசெய்துகொண்டுள்ள ஜோர்டானையும், பி. எல். ஓவையும் பெயர் குறிப்பிடாமல் கண்டித்துள்ளார்.

கடந்த முதலாந் திகதி சிரிய ராணுவத்தின் 49 வது ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர், மேற்கண்ட இரு அரபுநாடுகளும் அராபிய ஒத்துழைப்பைமீறியுள்ளதாகவும் இதனால் அராபிய அணி பலவீனமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒவ்வொரு அரபுநாடும் இஸ்ரேலுடன் தனித்தனிசமாதான ஒப்பந்தம் செய்துகொள்வது அராபியர்களை பலவீனப்படுத்தும் என சிரியா கூறிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

காளிமுத்து மீண்டும் அ.தி.மு.க வில் இணைவு

(சென்னை)

தி.மு.க வின் மாநில இலக்கிய அணிச் செயலாளரான காளிமுத்து மீண்டும் அ.தி.மு.க வில் சேர்ந்துள்ளார். எம். ஜி. ராமச்சந்திரன் அமைச்சரவையில் அமைச்சராக இருந்து பின், ஜானகி அணியுடன் சேர்ந்து ஜெயலலிதாவை இவர் எதிர்த்து வந்தார்,

ஜானகி அணி கலைக்கப்பட்டவுடன் ஜெயலலிதாவின் தலைமையின் கீழ் இருந்து வந்த இவர் பின் தி.மு.க வில் சேர்ந்தார். தி.மு.க வில் இருந்த போது ஜெயலலிதாவைப் பற்றி பலவாறான பிரசாரங்களையும் மேற்கொண்டு வந்த இவர் இப்போது அ.தி.மு.க வில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேறுக்கு முந்திய சோதனை தடைசெய்யப்பட்டுள்ளது

(புதுடில்லி)

பேறு காலத்திற்கு முன்பாக கருவுற்ற பெண்கள் மீது மருத்துவ பரிசோதனை செய்வதை தடுப்பதற்கு வகை செய்யும் விதத்தில் இந்தியாவில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இந்தியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இம்மசோதாவில் கருவில் இருப்பது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்பதைக் கண்டறிந்து பெண் குழந்தைகளை கருவிலேயே சிதைப்பதற்கு இச் சோதனை பயன்படுத்தப் படுவதாகவும், இத்தகைய தவறான நோக்கங்களுக்கு இந்த மருத்துவ பரிசோதனை பயன்படுத்தப் படுவதை தடுக்க வேண்டும் என்பதுமே இச் சட்டத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

எனினும் கருவுற்ற பெண் மற்றும் சிசுவின் உடல்நலம் குறித்து அறிந்து கொள்வதற்காக மட்டுமே இம் மருத்துவ பரிசோதனையை பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படலாம் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

உயிருடன் எரித்துக் கொலை

பீகார் மாநிலத்தில் சம்பவம்

(பாட்னா)

பீகாரில் இடம்பெற்ற வன்முறை ஒன்றின்போது 6பேர் உயிரோடு எரித்துக் கொலை செய்யப்பட்டனர்.

பீகாரிலுள்ள ஜார்ஜ்கண்ட் மாவட்டத்திலுள்ள ஒருவரது வீட்டுற்குச் சென்ற மஸ்தூர் கிசான் சங்கராம் சமிதிஎன்ற தீவிரவாத அமைப்பினர், வீட்டினுள் இருந்த 5 பேர்களை வெளியே இழுத்து துப்பாக்கியால் சுட்டு பின்னர் தீயில் தூக்கி வீசி எரித்துக் கொன்றனர் இதேபோல் மற்றொரு இடத்திலும் ஒருவர் இதே அமைப்பினரால் எரித்துக் கொல்லப்பட்டார்.

தெற்காசிய விளையாட்டு டிசம்பரில் சென்னையில்

(சென்னை)

7வது தெற்காசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் டிசம்பர் மாதம் சென்னையில் ஆரம்பமாகவுள்ளது- இதற்காக சென்னையில் கருத்தரங்கு மையங்கள், உள்ளக விளையாட்டரங்குகள், விளையாட்டரங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன-

500 வீடுகளைக் கொண்ட விளையாட்டுக் கிராமமொன்றும் அமைக்கப்படவுள்ளது- இங்கு இரண்டாயிரம் விளையாட்டு வீரர்கள் தங்கவைக்கப்படுவர்- இவ்விளையாட்டு போட்டியில் 9 நாடுகள் கலந்துகொள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொஸ்னிய சேர்பியர் உறவு முற்றாக துண்டிக்கப்படும்

யூகோஸ்லாவியா அறிவிப்பு

யூகோஸ்லாவியா, பொஸ்னிய சேர்பியர்களுடனான முழுத்தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வதாக அறிவித்துள்ளது. அண்மையில் மேற்கு நாடுகளுடன் இணைந்து முன்வைக்கப்பட்ட சமாதானத் திட்டத்தை நிராகரித்தமையை அடுத்து பொஸ்னிய சேர்பியர்களை தண்டிக்கும் முகமாகவே இம் முடிவு எடுக்கப் பட்டிருப்பதாக யூகோஸ்லாவிய ஜனாதிபதி அறிவித்துள்ளார்-

புதிய சமாதானத் திட்டத்தை சேர்பிய பாராளுமன்றம் கடந்த புதனன்று நிராகரித்திருந்தது தெரிந்ததே ஒரே மாதத்தினுள் மூன்றாவது தடவையாகவும் சமாதானத் திட்டம் நிராகரிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது-

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தயாரித்துள்ள இச் சமாதானத் திட்டத்தின் கீழ் முழு அளவில் யுத்த நிறுத்தம் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது- சேர்பியர்கள் சமாதானத் திட்டங்களை தொடர்ந்தும்நிராகரித்தால் பெல்கிரேட் மீதான பொருளாதாரத் தடையை தீவிரமாக்கப் போவதாக முக்கிய வல்லரசுகள் அறிவித்திருக்கின்றன-

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இங்கு இடம்பெற்று வரும் சிவில் யுத்தத்தில்யூகோஸ்லாவியா சேர்பியரை இதுவரை ஆதரித்து வந்தது தெரிந்ததே-

மரணம்

சமீப காலமாக சுழிபுரம் மேற்குப் பகுதியில் பரவிவந்த புதுவித காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த பாடசாலை மாணவி ஒருவர் அங்கு மரணமானார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரம் மேற்கு இறாத்தலடியைச் சேர்ந்த நாகையா சரோஜினிதேவி (வயது 12) என்ற பாடசாலை மாணவியே வைத்தியசாலையில் மரணமானவர் ஆவார். இறந்த சிறுமி சுமார் 45 நாட்களுக்கு மேல் நோய்வாய்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவரது சுகவீனம் அதிகரித்து கட்டுக்கடங்காத நிலையில் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்டார். (41

புலிகளின் குரல்

நிகழ்ச்சி நிரல்

1994. 08. 06

சனி இரவு

08. 01 - பலாலித் தளத்தில் வீரகாவியம் படைத்த கரும்புலிகள்- வெற்றி நாளைமுன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் ''தலைவரால் தலை நிமிர்ந்தோம்''

1994. 08. 07

ஞாயிறு காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

தங்கம் கடத்தி வந்த எயார்லங்கா ஊழியர் கைது

லண்டன், துபாய் ஊடாக கட்டுநாயக்கசர்வதேசவிமான நிலையம் வந்தடைந்த எயார் லங்கா விமானத்தில் 70லட்ச ரூபா பெறுமதியான 110 தங்க பிஸ்கட்டுக்களைக் கடத்தி வந்த இரண்டு எயார் லங்கா ஊழியர்கள் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விமானத்தில் கடத்தி வரப்பட்ட தங்க பிட்கட்டுக்களை உடலுக்குள் வைத்துக் கொண்டு வெளியே ற முயற்சித்த வேளையில் அங்கு சாதாரண உடையில் இருந்த சுங்க அத்தியட்சகர்கள் இவர்களை மடக்கிப் பிடித்தனர்.

சம்பந்தப்பட்ட இருசந்தேக நபர்களும் பிரதி சுங்கப்பணிப்பாளர் எஸ். ராமநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். தங்க பிஸ்கட்டுக்கள் பறிமுதல்செய்யப்பட்டதுடன் சந்தேக நபர்களுக்கு தலா இரண்டு கோடி பத்து லட்ச ரூபா வீதம் அபராதம் விதித்தார். சுங்க புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சுங்க அத்தியட்சகர்களான எஸ். சபாநாதன், எஸ் ஆர். யோகநந்தன் ஆகியோர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடையாள அட்டைகள் புதுப்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

1972-1973 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை உடனடியாக புதுப்பிக்க வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த விசேஷட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விசேட கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் எனவே உடனடியாக புதிய அடையாள அட்டைகளை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

9 பேருக்கு தபால் வாக்கு

(கொழும்பு)

யாழ். மாவட்ட தேர்தலில் 9 அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் மானிப்பாய், யாழ்ப்பாணம் உடுப்பிட்டி, கிளிநொச்சி நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

பொது

யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்குப் பெட்டிகள் வெளியே கொண்டு செல்லப்பட்டதாகவும் பெட்டிகள் மாற்றப்பட்டதாகவும் தெரிவித்த முறைப்பாடுகளை மையமாகக்கொண்டு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்-

18-வது

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் அ. அ. டொமினிக் அரவிந்தன்

யாழ் இந்துக்கல்லூரி உயிரியல் பிரிவு (95ஆம்ஆண்டு) மாணவன் செல்வன் அ. அ டொமினிக் அரவிந்தன் தனது 18-வது பிறந்த நாளை இன்று சனிக்கிழமை (06-08-94) இல் கொண்டாடுகின்றார்.

ஆசிரியர்கள், நண்பர்களின் நன்மதிப்புப் பெற்ற இவரை வாழ்த்துகின்றோம்

(9041) -- நண்பர்கள்

விற்பனைக்கு

சுத்தமான பிண்ணாக்கு, காவடிமார்க் கற்பூரம், கோழித்தீன், பாக்கு, சீனி, வாள்பிளேட் மலிவாக கிடைக்கும்.

கொடர்பு:-
C.M. சுகந்தினி
309, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

(9013)

கிழக்கு எல்லைப்புற பிரதேசங்களை சிங்கள பகுதிகளுடன் இணைக்க சதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற கிராமங்களை, இராணுவத்தினர், நிர்வாகச் செயற்பாடுகளை காரணங் காட்டி அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புறக் கிராமங்களான வக்கியெல்லை, காக்காச்சிவெட்டை, சின்னவத்தை, பாலையடிவட்டை, 35ஆம் கிராமம். 38ஆம் கிராமம், 39ஆம் கிராமம், என்பனவே அம்பாறை மாவட்ட இராணுவ நிர்வாகச் செயற்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையில், அம்பாறை மாவட்டத்தை மொனராகலை, மாவட்டத்துடன் இணைக்க கிழக்கிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும் என சிங்கள அரசியல்வாதிகள் சிலர் கூறிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேபோல், மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனை, வாகரை தொடக்கம் வெருகல் வரையான கடற்பிரதேசம் என்பன பொலனறுவை மாவட்டத்துடன் இராணுவ நிர்வாக செயற்பாட்டு பிரிவின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

பொலனறுவை மாவட்டத்துக்கு ஒருகடற்பிரதேசம் தேவை என்ற சிங்களப் பேரினவாதிகளின் கோரிக்கையின்படியே இராணுவம் இவ்வாறு செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை வெலிக்கந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் தனிச் சிங்கள குடியேற்றத்திட்டங்களும் பாரிய நிர்வாக அபிவிருத்தித் திட்டங்களும் அரசினால் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது

ஐ.தே.க. மாகாண உறுப்பினரால் சு.க. அமைப்பாளர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கல்கமுவா தேர்தல் தொகுதியில் மீகலை பிரதேச சுதந்திரக்கட்சி அமைப்பாளர், ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாணசபை உறுப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுதந்திரக்கட்சி மீகலை அமைப்பாளராக என். எம். தனபால (37 வயது என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார் இவரின் வீட்டிற்கு இரவு 11 மணிக்கு வடமேல் மாகாணசபை ஐ.தே.க. உறுப்பினர் ஆர். எஸ் கே.வி ரட்ணாயக்காவும் அவரின் குழுவினரும் சென்றுள்ளனர் என்றும் அவரே இக்கொலையை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்துப்பாக்கிச் சூட்டினால் சு.க. அமைப்பாளர் ஸ்தலத்திலேயே மரணமானார்-

கல்வி நிறுவனங்கள் விடுமுறைதினம்

பலாலி தளம் மீதான தாக்குதல் வெற்றி நாளை முன்னிட்டு கோட்ட ரீதியாக இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிப்பதற்கு வசதியாக தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் நாளை ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை நாளாக பிரகடனம் செய்துள்ளது அன்றைய தினத்தில் முழு வகுப்புக்களையும் நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அதன் சகல கிளைகளுக்கும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

வீரச்சாவு

தலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் செல்வகுமார் [ஐயாத்துரை இராஜதுரை - மன்னார் வீதி, நெல்லுக்குளம் வவுனியா] இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

புலமைப்

ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி காலை 9 30

மாகாணசபை உறுப்பினர் பொலிசாரால் கைது

கல்கமுவ தேர்தல் தொகுதியில் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் எம். எம். தனபால சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அவரது 3000க்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் இவரின் கொலைக்கு காரணம் எனக் கருதப்படும் ஐ. தே. க. மாகாணசபை உறுப்பினரின் வீட்டைத் தகர்த்து விட்டு தீயிட்டுள்ளனர்.

அம்மாகாணசபை உறுப்பினரைக் கைது செய்யாவிட்டால்பொலிஸ் நிலையத்தைத் தாக்கப் போவதாகக் கூறியுள்ள ஆதரவாளர்கள் கைது செய்வதற்கு காலக்கெடுவும் விதித்தனர்.

இதனைத் தொடர்ந்து அம்மாகாண சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிமாவோ

இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான கருத்து முரண்பாடு வலுவடைந்து வருவதாகவும், இவ்விடயம்குறித்துபொ ஐ. மு. செயலாளர் ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்[illegible]றது

பொ ஐ மு

திட்டமிட்டு செய்யும் பொய்ப் பிரசாரத்தை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மரணச்சடங்கில் வயோதிபர் மரணம்

(வடமராட்சி)

உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு இறுதிச்சடங்கிற்காக யாழ்ப்பாணத்திற்குச் சென்றவர் அங்கே திடீரென மரணமானார்.

காரைகால் மத்தி துரையன் தோட்டத்தைச்சேர்ந்த தம்பையா சபாரட்ணம் (61) என்பவரே இவ்வாறு நேற்று முன் தினம் மரணமானார்.

பொ. ஐ. முன்னணிக்கு ஜே. வி. பி ஆதரவு

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என ஜே. வி. பியின் மத்திய கமிட்டி நேற்று முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டியில் மிகவும் இரகசியமான ஓர் இடத்தில் கூட்டிய ஜே. வி. பி. மத்திய கமிட்டியைச் சேர்ந்த அரசியல் பிரிவு உறுப்பினர்கள் இம் முடிவை அறிவித்துள்ளனர் எனவும் ஜே. வி. பியின் பெயரால் சிறிலங்கா முற்போக்கு முன்னணி என்றபெயரில் போட்டி

இரசாயனப்

படுவதில்லை. இதன் காரணமாக பல உயிரிழப்புகள் ஏற்படுவதுடன் ஏராளமானோர் நோய்வாய்ப்படுகின்றனர் மேலும் சுற்றுச்சூழல் மாசடைவதிலும் இப் பாவனை பெரும் பங்கை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

உணர்வு பூர்வமாக

மற்றும் உறுதுணையாக நின்ற இரு போராளிகளினதும் உருவப்படங்கள் ஆங்காங்கே அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு, அணையாத் தீபங்கள் ஏற்றப்பட்டு இருந்தது-

இப்பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளதும் மற்றைய இரு போராளிகளினதும் உருவப்படங்களுக்கு மலர்கள் தூவியும், மலர்மாலைகள் அணிவித்தும் மக்கள் அஞ்சலி செலுத்துவதை அவதானிக்க முடிந்தது-

மேலும் குடாநாட்டின் முக்கிய சந்திகள் மற்றும் பொது மக்கள் கூடும் பகுதிகளில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு கரும்புலிகள் நினைவுப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன-

யிடுவதன்மூலம் 17 ஆண்டுகள் நாட்டை அழிவுப் பாதையில் செலுத்திய ஐ தே. க. மீண்டும் ஆட்சி அமைப்பதற்கே இவ் அணி முயல்வதாகவும் இதற்கு இடம்கொடுக்கவேண்டாம் எனவும் அக் கமிட்டி விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடமராட்சி

தனர்.

வல்வெட்டித்துறை பகுதியில் வீடு ஒன்றின்மீது 10. 30 மணிக்கு விழுந்த ஷெல்லுக்கு நித்திரையில் இருந்த நடராசா செந்திவேல்(வயது-68) என்பவர் தலையில் படு காயமடைந்தார்

தொண்டமனாறு கெருடாவில் குடியிருப்புமீது நேற்று அதிகாலை 3 மணியளவில் விழுந்த மற்றொரு ஷெல்லுக்கு நித்திரையில் இருந்த வெள்ளை ஆறுமுகம் (வயது-75) என்பவர் காயமடைந்தார். நேற்று முன் தினம் முதல் நேற்றுக் காலை வரையில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் நெல்லியடி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கெருடாவில், புறாப்பொறுக்கி, வல்லை, கப்புதூ ஆகிய குடியிருப்புகள்மீது பரவலாக விழுந்து வெடித்தன நேற்று பகல் 10 மணியளவிலும் குஞ்சர்கடையை அண்டிய பகுதியிலும் ஒரு ஆட்லறி ஷெல் விழுந்து வெடித்தது

அடுத்தடுத்து இரு தினங்களாக வடமராட்சிக் குடியிருப்புமீது பலாலி முகாமில் இருந்து தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருவதாகவும் இதனையடுத்து மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக எமது வடமராட்சி செய்தியாளர் அறிவிக்கின்றார்

பலாலிதளத்தில்

தொடர்ந்து நடைபெற்று மாலை 5 00 மணியளவில் அல்வக் கோட்ட இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும் இடங்களைச் சென்றடையவுள்ளன.

வலிகாமம் கோட்ட ஊர்தியின் பவனி அரியாலை செல்லக்கிளிஅம்மான் குடியேற்றத்திட்டத்திலிருந்து ஆரம்பித்துக் கண்டிவீதியூடாகப்புங்கங்குளம் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து புகைவண்டி நிலைய வீதியூடாக துண்டிச் சந்தி சென்று, கொழும்புத்துறை வீதியால் கொழும்புத்துறை சென்று, அங்கிருந்து [illegible] லிச் சந்தியில் ஆரம்பித்து வல்லை வீதியூடாக கரவெட்டியைச் சென்றடையும், அங்கிருந்து விக்கினேஸ்வரா வீதி, அரசடி வீதி, கிழவி தோட்டம் பிள்ளையார் கோயில் சந்தையை வந்தடைந்து துன்னாலைச் சந்தி - மந்திகைச் சந்தி - மாலு சந்தியை வந்தடைந்து வதிரிச் சந்திக்கு சென்று நெல்லியடியை அடைந்து அங்கிருந்து குஞ்சர் கடையடிக்குச் சென்று சலாம் வீதியூடாக நவிண்டில் வீதியூடாக உடுப்பிட்டி சென்று கம்பர்மலைச் சந்தி-வல்வெட்டித்துறைச் சந்தியால் கடற்கரை வீதியூடாக பொலிகண்டி, திக்கம். சக்கோட்டை,

கொடர்பு:-
C.M. சுகந்தினி
309, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
(9013)

கலைவளர்ச்சிக்கு ஒரு விழா! உங்கள் மனதுக்கு திருவிழா!

மாபெரும் நாடக விழா

நிசாந்தன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில்
நிசாந்தன் கலைக் குழுவினரின்
வளர்ச்சி நிதிக்காக

30-07-1994-ல் நடைபெறவிருந்து தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்ட மாபெரும் நாடக விழா

இன்று இரவு 7 30 மணியளவில்
உடுப்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருக்கிறது

O காணத்தவறாதீர்கள் O

''சகுனிகள் மூவர்'' நாடகம் நடாத்துவதில் ஏற்பட்ட எதிர்பாராத தடங்கல் காரணமாக

''ஒருபிடி மண்'' புகழ் முருகையாவின்

★ தாகம் ★

நாட்டார் வழக்கியற் கழகம் பெருமையுடன் வழங்கும்
(யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பங்குகொள்ளும்)

பேராசிரியர் இ. பாலசுந்தரத்தின்

சத்தியவான் சாவித்திரி
(இசை நாடகம்)

★ ஒளி - தயா ஒளி அமைப்பாளர்கள்
★ ஒலி - வதனா ஒலி அமைப்பாளர்கள்

ஆதரவுக்கு நன்றி

(சி10061) - நிசாந்தன் கலைக்குழு

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

புலமைப்

ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி காலை 9 30 முதல் 10.45 வரை கணிதம், 11 45 முதல் 12.15 வரை தாய்மொழி, பிற்பகல் 12.45 முதல் 13 45 வரை அட்சர பரீட்சையும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் 108 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது தெரிந்ததே.

தேர்தலில்

என்றும் அவ்வாறானதொரு நிலையிலேயே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த வேண்டுகோளை சகல கட்சிகளும் முழுமையாக ஏற்றுக் கொண்டதாக அறிவித்துள்ளன-

தேர்தல்

பாடு செய்ய முடியும் என்றும் இதன் பின்னர் தேர்தல் தொடர்பாக பூர்வாங்க அறிக்கை ஒன்றை தயாரித்து தேர்தல் ஆணையாளருக்கு ஒப்படைக்க இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

சந்திரிகாவின்

டிருக்கையில் கூட்டத்தில் சரமாரியாக கற்கள் வீழ்ந்தன கூட்டத்தில் கைகலப்பும் ஏற்பட்டது இவர்களைக்கலைக்க பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் இதன் பின்னரும் கல்வீச்சு தீவிரமடையவே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் கூட்டத்திற்கு உலங்கு வானூர்தியில் சந்திரிகா வந்து சில நிமிடங்கள் உரையாற்றினார் மேலதிக பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

பொ ஐ மு

திட்டமிட்டு செய்யும் பொய்ப் பிரசாரத்தை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கட்சித் தலைமைப் பதவி சந்திரிகாவிடம் வழங்கப்பட இருப்பதாகவும் இதில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

யன் தோட்டத்தைச்சேர்ந்த தம்பையா சபாரட்ணம் (61) என்பவரே இவ்வாறு நேற்று முன் தினம் மரணமானார். சாட்சியங்களை நெறிப்படுத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா இருதய நோய் ஏற்பட்டு இயற்கை மரணம் அடைந்துள்ளார் என தீர்ப்பு வழங்கினார். (யோ)

நன்றி நவில்கின்றோம்

அமரர் ஸ்ரீபன் மகேந்திரா போல் அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையம் சாற்றி அஞ்சலி செலுத்தியவர்கள், ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்தவர்கள், குறிப்பாக மேன்மை தங்கிய யாழ் ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து நிற்கிறோம்.

51/1 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்.

(9038)

மரண அறிவித்தல்

திருமதி இராஜநாயகி பாலசுந்தரம்

தொண்டைமானாறு 3-ஆம் சந்தியைச் சேர்ந்த திருமதி இராஜநாயகி பாலசுந்தரம் 04-08-1994 வியாழக்கிழமை இரவு காலமானார். இவர் காலஞ்சென்ற பொன். பாலசுந்தரம் J. P. அவர்களின் அன்பு மனைவியும், சறோஜினி, கமலலோஜினி, மீனலோஜினி, விமலலோஜினி, ஹரிச்சந்திரா, ஜெயச்சந்திரன், பத்மலோஜினி. ஞானச்சந்திரன், இராமச்சந்திரன், யோகச்சந்திரன், பிறேமச்சந்திரன், சிலெளஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சக்திவேல், தேவராஜா, அருணகிரி, புஸ்பலிங்கம், வசந்தா, விஜயலக்சுமி, நாகேஸ்வரன், இரட்ணகாந்தா, ஸ்ரீ சுமங்கலா, இராஜேஸ்வரி, சுகந்தி, வாசுகி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (05-08-94) பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொண்டைமானாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பா. ஹரிச்சந்திரா
3-ஆம் சந்தி,
தொண்டைமானாறு.

தகவல்:
மக்கள், மருமக்கள்

(9036)

நிலைய வீதியூடாக துண்டிச் சந்தி சென்று, கொழும்புத் துறை வீதியால் கொழும்புத் துறை சென்று, அங்கிருந்து கடற்கரை வீதியால் பாசையூர், குருநகர் சென்று பழைய பூங்காவீதியால் சுண்டுக்குழிச் சந்தியை அடைந்து, கொழும்புத்துறை வீதி, கோயில் வீதி வழியாக கைலாய பிள்ளையார் கோயில் சந்தி வந்து நாவலர் வீதியால் ஆனைப்பந்திச் சந்தியை அடைந்து, அங்கிருந்து பருத்தித்துறை வீதி, ஆரியகுளம்சந்தி, அர்ச்சுனா வீதியூடாக காங்கேசன் துறை வீதியை அடைந்து, அவ் வீதியால் நாச்சிமார் கோயிலடி சென்று, இராமநாதன் வீதியால் வளாகச் சந்தி சென்று, பலாலி வீதி வழியாகத் திருநெல்வேலிச் சந்தியால் ஆடியபாதம்வீதிக்குத் திரும்பி கல்வியன்காட்டுச் சந்தியை அடைந்து, பருத்தித்துறை வீதி வழியே இருபாலைச் சந்தி, கோப்பாய்ச் சந்தி, நீர்வேலிச் சந்தி, புத்தூர்ச் சந்தியை அடைந்து, சுண்ணாகம் வீதியூடாக சுண்ணாகம்சந்தி, கந்தரோடை வீதி, மாசியப்பிட்டிச் சந்தி, தொட்டிலடிச் சந்தி, சங்கானை சென்று காரைநகர் வீதியால் சித்தங்கேணி, சுழிபுரம், மூளாய் சென்று, அராலி வீதியால் வட்டுக்கோட்டை, அராலி, மீண்டும் வட்டுக்கோட்டை, சங்கரத்தைச் சந்தியால் நவாலி வீதிவழியாக ஆனைக்கோட்டைச்சந்தியால் மானிப்பாய் வீதியூடாக மருதடிப் பிள்ளையார் கோயில் சந்தியை அடைந்து, உடுவில் வீதியூடாக மருதனார் மடம் சந்தியில், காங்கேசன்துறை வீதி வழியாக உப்புமடம் சந்தி - இருபாலைவீதி கோண்டாவில் சந்தி- இராசபாதைச் சந்தியால் இராசபாதை வழியாகப் பழம்சந்தி, ஆடியபாதம் வீதியூடாகச் செங்குந்தா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தைச் சென்றடையும்.

வடமராட்சிக் கோட்ட ஊர்தியின் பவனி அச்சுவேகம்பர்மலைச் சந்தி-வல்வெட்டித்துறைச் சந்தியால் கடற்கரை வீதியூடாக பொலிகண்டி, திக்கம். சக்கோட்டை, இன்பருட்டி, வியாபாரிமூலை, நாவலடிச் சந்தியால் ரஞ்சன் பூங்காவடி வந்தடைந்து, கிராமக்கோட்டுச் சந்தி, ஆனை விழுந்தான் சந்தி சென்று அங்கிருந்து கற்கோவளம், நெல்லண்டை, மணியகாறன் சந்தி வந்து. தும்பளை வீதியால் மெத்தைக் கடைச் சந்தி, பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடையும்.

தென்மராட்சிக் கோட்ட ஊர்தியின் பவனி நாவற்குழிச் சந்தியில் ஆரம்பித்து கேரதீவு-தச்சன்தோப்பு, தச்சன்தோப்பு வீதியூடாக கண்டி வீதி - கைதடிச் சந்தி- கைதடி வக்கு வீதி - உள் பாதை வழியாக கோப்பாய் வீதி - கைதடிச் சந்தி நுணாவில் சந்தி - சரசாலை வீதி - கனகன்புளியடிச் சந்தி - வேம்பிராய் வீதியால்-வேம்பிராய் சந்தி -மந்துவில் வீதி-வரணிச் சந்தி - கொடிகாமம் - மிருசுவில் - எழுதுமட்டுவாள் - முகமாலை - வேம்பொடுகேணி - பளை-புலோப்பளை-கிளாலி-கச்சாய்-அல்லாரை மீசாலை-சங்கத்தானை - சாவகச்சேரி-பேருந்து நிலைய முன்வீதி-மகளிர் கல்லூரி வீதி - பெருங்குளம் சந்தி - கல்வயல் கண்ணன் பாடசாலையடி - கற்குழி வீதி - கண்டி வீதி-சாவகச்சேரி - கண்டி வீதி - வழியாக மீசாலை மாவடிப்பிள்ளையார் கோயில் முன்றலைச் சென்றடையும்.

இவ்வூர்திகள் வீதிவழியே பவனி வருகையில் வீதியின் இருமருங்கிலும் நின்று தமது வீரவணக்கத்தைச் செலுத்தும் வண்ணமும், மிதிவண்டிகளிலும், வேறு வாகனங்களிலும் வருபவர்கள் ஊர்தி தாண்டிச் செல்லும்வரை ஓரமாக நிறுத்தி வீரவணக்கம் செய்து செல்லுமாறும் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.